DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 133/2024 |
| Deposition of Witness for | : | P.W. 9 |
| Name | : | **திரு. இளங்கோவன்** |
| Father's Name | : | **கணேசன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | **VAO** |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1, 2 ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.01.2026

**முதல் விசாரணை:**

1. நான் கல்லல் பிர்கா மாலைகண்டான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023-ம் ஆண்டு கூடுதல் பொறுப்பாக கல்லல் பிர்கா செம்பனூர் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். ஆஜர் எதிரி மணிகண்டன் என்பவரை கடந்த 09.06.2023 ம் தேதி மதியம் சுமார் 11.30 மணியளவில் செம்பனூர் பேருந்து நிறுத்தத்தில் வைத்து கல்லல் காவல் ஆய்வாளர் ஒரு வழக்கு சம்மந்தமாக விசாரித்து கொண்டிருந்தார். போலிசாரிடம் மணிகண்டன் ஒரு வாக்குமூலம் கொடுத்தார்.

2. ஒரு அடிதடி வழக்கு சம்மந்தமாக வாக்குமூலம் கொடுத்தார். என்னுடன் செம்பனூர் கிராம உதவியாளரும் இருந்தார். அந்த வாக்குமூலத்தை போலிசார் பதிவு செய்துகொண்டார்கள். பின்னர் மதியம் சுமார் 1.00 மணியளவில் எதிரி

மணிகண்டன் ஊரான மீனாட்சிபுரம் கிராமத்திற்கு போலிசார் அவரை அழைத்து சென்றார்கள். மணிகண்டன் வீட்டின் தெற்குபுறம் அரிவாள்மனை ஒன்றை போலிசார் கைப்பற்றினார்கள்.

3. அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பமும் 1வது எதிரியின் வீட்டில் வைத்து தயார் செய்யப்படட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பமும் என்னுடையது தான். எதிரி சொன்னதன் அடிப்படையில் மேற்படி அரிவாள் மனை கைப்பற்றப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அரிவாள்மனை தான் அன்று 1வது எதிரியின் வீட்டிலிருந்து போலிசார் கைப்பற்றினார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 09.06.2023 ம் தேதி மாலைகண்டான் அலுவலகத்தில் இருந்தேன் என்றால் செம்பனூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தேன். எங்கள் அலுவலகத்திற்கும் பேருந்து நிறுத்தத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 60 மீட்டர் இருக்கும். அந்த பேருந்து நிறுத்தம் பயணிகள் இருக்கக்கூடிய இடம் என்றால் சரிதான். போலிசார் எந்த எதிரியை விசாரித்தார்கள் என்றால் 1வது எதிரி மணிகண்டனை விசாரித்தார்கள். (சாட்சி நீதிமன்றத்தில் 1வது எதிரி மணிகண்டனை அடையாளம் காண்பித்தார்).

2. நான் செம்பனூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக எவ்வளவு காலம் இருந்தேன் என்றால் சுமார் 1வருட காலமாக இருந்தேன் அதனால் எனக்கு கிராம மக்களை தெரியும். போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்ற பேப்பர் கைப்பட எழுதப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட அரிவாள் மனை ரத்தக்கறை படிந்ததா என்றால் ஆமாம் படிந்திருந்தது. மீனாட்சிபுரத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் போலிசார் அவர்களது ஜீப்பில் முன்னால் செல்ல நாங்கள் பின்னால் சென்றோம். மீனாட்சிபுரத்தில் உள்ள 1வது எதிரியின் வீட்டிற்கு

அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். போலிசார் வழக்கு சொத்தான அரிவாள் மனையை எங்கிருந்தது எடுத்தார்கள் என்றால் வீட்டில் எந்த பகுதியிலிருந்து எடுத்தார்கள் என்று தற்போது ஞாபகமில்லை.

3. போலிசார் வழக்கு சம்மந்தமாக அழைத்தால் நான் அரசு ஊழியர் என்பதால் காவல்நிலையம் சென்று கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். தேதி, மாதம், வருடம் ஆகியவற்றை நான் எனது கையில் எழுதி வைத்துக்கொண்டு பார்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் எதிரியை நான் பார்த்ததேயில்லை என்றாலும் போலிசார் சொன்னதன் அடிப்படையில் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.01.20 14:29:18 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**